DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 209/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : மீனாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.04.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th April 2026.

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் உதவி ஆய்வாளர் ராமேஸ்வரி என்பவரால் ச/பி.498(ஏ), 294(பி), 406, 506(1) இதச மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.47/2013 கொண்ட முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 14.05.2013 ம் தேதி சம்பவ இடத்திற்கு சென்ற சாட்சிகள் கவிதா, கள்ளவாண்டநாடார், தங்கதுரை, பொன்னுத்தாய் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.05.2013 ம் தேதி சாட்சி பச்சைக்கிளி மற்றும் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்த காவலர் ராமேஸ்வரி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடி வந்த நிலையில் அதே தேதியில் காலை 8.45 மணியளவில் எதிரிகள் குருசாமி மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோரை மாங்குடி பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். 1ம் எதிரி கருப்பசாமி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன் பிணை பெற்றிருந்ததால் அவரை கைது செய்யவில்லை. 05.09.2014 ல் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவமானது 2009ம் வருடம் நடைபெற்றதாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் தொடர்பாக 14.05.2013ம் தேதி 16.00 மணிக்கு தகவல் கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் இறுதிபக்கத்தில் தான் புகார்தாரரின் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புகார்தாரரின் கையொப்பத்திற்கு கீழ் எழுதப்பட்டுள்ள தேதியும் அந்த கையொப்பமும் வெவ்வேறு மையில் எழுதப்பட்டுள்ளதுபோல் உள்ளதா என்றால் இல்லை. புகார்தாரரின் கையொப்பத்திற்கு கீழ் எழுதப்படடுள்ள தேதியான 14.05.2013ல் 4 என்ற எண் மட்டும் ஓயிட்னரால் திருத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது தொடர்பாக மேலெழுத்தும் புகார்தாரரின் கையொப்பத்திற்கு கீழ் உள்ள தேதியும் ஒரே நபரால் எழுதப்பட்டது போல் உள்ளது என்றால் சரியல்ல. புகாரிலும் முதல் தகவல் அறிக்கையில் எந்த சம்பவம் எப்போது நடைபெற்றது என்று குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்து எந்த தேதியும் குறிப்பிட்டு

தெரிவிக்கப்படவில்லை என்றாலும், அதனால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் பொய்யானவை என்றாலும் சரியல்ல. அரசு தரப்பு பட்டியல் சாட்சி 2 பச்சைக்கிளி புகார்தாரர் கவிதாவின் தாயார் என்றால் சரிதான். அரசு தரப்பு பட்டியல் சாட்சி 3, கள்ளவாண்டநாடார் மற்றும் அரசு தரப்பு பட்டியல் சாட்சி 4 தங்கத்துரை ஆகியோர் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரியல்ல. அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 3 மற்றும் 4 புகார்தாரின் ஊரை சேர்ந்தவர்கள். மேற்படி இரு சாட்சிகளும் மாங்குடியில் நாட்டாமையாக இருந்தார்கள் என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் நான் எனது விசாரணையின் போது பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் சமுதயா வழக்கப்படி திருமண நிச்சயதார்த்தின் போது அவர்கள் சமுதாய நாட்டாண்மையின் முன்பு பட்டோலை எழுதப்படும் என்ற விபரம் எதுவும் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1ன் திருமண நிச்சயதார்த்தின் போது அவரது உறவினர்கள் முன்னிலையில் அ.சா.,1க்கு அளிக்கப்படும் சீர் சீராட்டுகள் பொறுத்து வாயமொழியாக பேசி முடிவெடுக்கப்பட்டதாக எனது விசாரணையில் துலங்கும். மேற்படி பட்டோலை ஆவணம் அ.சா.1ன் திருமண நிச்சயதார்த்தின் போது எழுதப்பட்டதாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் அ.சா.1ஐ 1ம் எதிரி கயிற்றால் கொலை முயற்சி செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. புகார்மனுவில் 3 எதிரிகளும் அ.சா.1ஐ பார்த்து நீ செத்தால்தான் எங்களுக்கு நிம்மதி என்று தெரிவித்து அடித்ததாக கூறப்பட்டுள்ள நிலையில், அவர்கள் எங்கு எப்போது வைத்து அந்த செயலை செய்ததாக குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றால் அந்த சம்பவம் எப்போது நடைபெற்றது என்று தெரிவிக்கப்படவில்லை. ஆனால் மேற்படி சம்பவம் எதிரிகளின் வீட்டில் வைத்து நடைபெற்றதாக புகார்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனது விசாரணையில் அ,.சா.1 1ம் எதிரியை திருமணம் செய்த பிறகு அவர்கள் இருவரும் மாங்குடியில் குடியிருந்ததாக துலங்குமா என்றால் துலங்கும். திருமணம் முடிந்தவுடன் அ.சா.1

மற்றும் 1ம் எதிரி ஆகியோர்கள் திருப்பூருக்கு சென்று அ.சா.1 குடும்பத்துடன் ஒன்றாக குடியிருந்ததாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. புகார்மனுவில் எந்த தேதியிலிருந்து அ.சா.1 மற்றும் 1 ம் எதிரி ஆகியோர் பிரிந்து வாழ்ந்து வந்தனர் என்று தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். புகார்மனுவில் அ.சா.1, 1ம் எதிரிக்கு எதிராக பல காவல்நிலையங்களில் புகார்கொடுத்த விபரம் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1, 1ம் எதிரி காணமல் போனதாக தெரிவித்து புகார் அளித்த விபரம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. குற்ற இறுதி அறிக்கை என்னால் தாக்கல் செய்யப்பட்ட காலகட்டத்தில் அ.சா.1 யாருடன் எங்கு குடியிருந்து வந்தார் என்ற விபரம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். எனது விசாரணையில் நான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காலகட்டத்தில் அ.சா.1 அவரது தாயார் வீட்டில் குடியிருந்ததாக துலங்கும். 2009 ம் வருடத்தில் அ.சா.1 மற்றும் 1ம் எதிரிக்கு இடையில் விவாகரத்து பெறுவதற்காக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரம் எனது விசாரணியல் துலங்குமா என்றால் துலங்கும். 2007 ம வருடம் ஆகஸ்ட் மாத்திலிருந்து அ.சா.1 மற்றும் 1ம் எதிரி பிரிந்து வாழ்ந்து வந்தனர் என்றாலும், அந்த பொருண்மை மறைக்கப்பட்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் மனு கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டு குற்ற நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல. அ.சா.1 மற்றும் 1ம் எதிரி நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்களது திருமணத்தின் போது வரதட்சணை எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலம் சரியல்ல. புகார்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள நகை மற்றும் பணத்தை எதிரிகள் எந்த காலத்திலும் புகார்த்தாரிடமிருந்து அவரது குடும்பத்தாரிடமிருந்தோ பெற்றதில்லை என்றாலும் நகை மற்றும் பணம் கேட்டு புகார்தாரரை எதிரிகள் எந்த காலத்திலும் கொடுமை செய்ததில்லை என்றாலும், சரியல்ல. அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட பொய் புகாரின்அடிப்படையில் இவ்வழக்கு

பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி 1ம் எதிரி தரப்பில் எடுக்கப்பட்ட குறுக்கு விசாரணை அடாப்ட் செய்து கொள்வதாக தெரிவித்தார்.**